

கலைஞர் 100 1924 - 2023

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 123 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – கார்த்திகை 27 – புதன்கிழமை 13 டிசம்பர் 2023 – திருச்சி ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 123 : Thiruvalluvar Year - 2054 - Karthigai 27 - Wednesday 13 December 2023 - Trichy ★★ 8 Pages ₹ 5.00


# உடன்பிறப்பே, உன் இலட்சியப் பயணம் தொடரட்டும்!



**நெல்லைச் சீமையில் 2007ஆம் ஆண்டு டிசம்பர் 15, 16 ஆகிய இரண்டு நாட்கள் கழக இளைஞர் அணியின் முதல் மாநில மாபெரும் மாநாட்டை - அப்போதைய கழக இளைஞர் அணிச் செயலாளர் - தற்போதைய கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மிக பிரம்மாண்டமான முறையில் எழுச்சியோடு நடத்திக் காட்டினார். இம்மாநாட்டிற்காக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், 'இளைஞர்களுக்கு வழி விடுவோம்' எனும் தலைப்பில் முரசொலி'யில் 2007 நவ.7-ந் தேதி முதல் டிச.2-ந் தேதி வரை தொடர்ச்சியாக 25 'கலைஞர் கடிதங்கள்' எழுதி உடன்பிறப்புகளுக்கு அழைப்பு விடுத்தார். தற்போது சேலத்தில் 2023 - டிச.24 அன்று கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடத்த விருக்கும் கழக இளைஞர் அணியின் 2-வது மாநில மாநாட்டையொட்டி, அக்கடிதங்களை இங்கே எடுத்து வெளியிடுவதில் மகிழ்கிறோம்.**

**உடன்பிறப்பே,**

நெல்லைச் சீமையிலே தமிழ் வளர்த்த கால்டுவெல் பாதிரியார் குறித்து, நேற்றைய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தேன். அதுபோலவே வீரமா முனிவர், ஜி.யு. போப் போன்ற கிறித்தவ மதப் போதகர்களும் நெல்லைச் சீமையிலே ஆற்றிய பணிகள் அதிகமாகும்.

கிறித்தவர்களைப் போலவே இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்த உமறுப் புலவர் அவர்கள் கூட, நெல்லைப் பகுதியிலேதான் கல்வி பயின்று, நபிகள் நாயகத்தின் வரலாற்றினை சீறாப் புராண மாகப் பாடினார். காயல்பட்டினம், தென்காசி, மேலப்பாளையம், பாளையங்கோட்டை, கடைய நல்லூர் போன்ற பகுதிகளில் இஸ்லாமிய சமுதாயத்தினர் பெருமளவில் உள்ளனர். கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்கள், இந்த நெல்லைச் சீமையிலே "பேட்டை"யில் பிறந்தவர்தான்.

இந்துக்கள் என்ற வகையில் இந்தச் சீமை யிலே மறவர் குலத்தினர், நாடார் சமுதாயத்தினர், ஆதி திராவிட சமுதாயத்தினர், யாதவ சமுதாயத் தினர், நெல்லை வெள்ளாளர் சமுதாயத்தைச் சேர்ந்த பிள்ளைமார்கள், கடற்கரை பகுதிகளில் மீனவர் சமுதாயத்தினர், ஒருசில பகுதிகளில் நாயுடு வகுப்பைச் சேர்ந்தவர்கள் அதிகமாக வாழ்ந்து வருகிறார்கள்.

நெல்லைச் சீமைக்கு மற்றொரு பெருமை தாமிரபரணி நதி. பொருநை என்று போற்றப்படு வது இந்த நதி. சோழப் பெரு நாட்டின் காவேரி நதி, நெற்களஞ்சியத்துக்குக் காரணமான நதி யெனினும் - நெல்லையில் "தாமிரபரணி" நதி, செழிப்புமிகு விளைச்சல் வழங்கும் நதியென இன்றளவும் பாராட்டப்படுகிறது.

திருநெல்வேலியில் இளைஞர் அணி சார்பில் மாநில மாநாடு நடைபெறுகிறது என்றபோதிலும், முன்பு நெல்லை மாவட்டத்தோடு இணைந்தி ருந்த தூத்துக்குடி மாவட்டத்திற்கும், அந்த மாவட் டங்களுக்கு பக்கத்திலே உள்ள குமரி, விருதுநகர், ராமனாதபுரம் மாவட்டங்களுக்கும் இந்த மாநாட் டில் பெரும் பங்குண்டு. ஒன்றுபட்ட நெல்லை மாவட்டத்தின் பரப்பளவு சுமார் 4500 சதுர மைல் கள். தென் பாண்டி நாடு என்பதுதான் பண்டைக் காலத்துப் பெயர்.

வெள்ளையர் ஆட்சிக்கு எதிராக முதன் முதலாக போர்க் குரல் கொடுத்த பூலித் தேவர், வாழ்ந்த பூமியும் நெல்லைச் சீமைதான். இந்த மாவீரனுக்கு தி.மு. கழக ஆட்சியில் சிலை அமைத்ததோடு, நெற்கட்டும் செவல் கிராமத்தில் அவரது இல்லத்தை வரலாற்றுச் சின்னமாகவும் அரசு அமைத்துள்ளது.

வெள்ளையரை எதிர்த்து போர்க் குரல் கொடுத்த வீரபாண்டிய கட்டபொம்மன் வாழ்ந்த பகுதியும் இந்தச் சீமையிலே உள்ள பாஞ்சாலங் குறிச்சி பகுதி தான். பாழடைந்து கிடந்த பாஞ்சாலங்குறிச்சிக்கு என்னை அழைத்துச்

## கலைஞர் கடிதம்

சென்று, கட்டபொம்மன் மாளிகை புதிதாக எழு வதற்கும், கட்டபொம்மன் வாரிசுகளுக்கு வீடு வாசல், மாதாந்திர நிதி உதவி வழங்குவதற்கும் அரசின் சார்பில் ஏற்பாடு செய்திட, எனக்கு ஊக் கமளித்தவர்கள் மாவீரர் மணலி கந்தசாமி அவர் களும், அன்புத் தம்பி க. சுப்புவும் என்பதை பெருமையுடன் நினைவுகூர்கிறேன்.

சுதந்திரக் கனலை எழுப்பும் பாடல்களை எழுதி மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டிய மகாகவி பாரதி உலவிய மண்ணும் இந்த நெல்லைச் சீமை தான். தமிழறிஞர் சுந்தரனார் - இந்த மாவட்டத்தின் சில பகுதிகளை இணைத்து, அவர் எழுதிய "மனோன்மணீயம்" நூலை வெளியிட் டது குறிப்பிடத்தக்கதாம்.

இந்தப் பகுதியைச் சார்ந்த புலவர் பெருமக்கள் பலர் சங்கப் பாடல்களில் இடம் பெற்றவர்களாகும்.

தொல்காப்பியர், காக்கைப்பாடினியார், பனம் பாரனார், அதங்கோட்டாசான், நத்தத்தனார் போன்றோரை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

தென்பாண்டி நாட்டை ஆட்சி செய்த மன்னர் கள் என்று எடுத்துக் கொண்டால் பராக்கிரம பாண் டியன், பராக்கிரம பாண்டிய குலசேகரப் பாண்டி யன், அழகன் பெருமாள் குலசேகரப் பாண்டியன், மாற வர்ம பாண்டியன், வீரபாண்டியன், மாற வர்ம சுந்தரபாண்டியன், குலசேகரப் பாண்டி யன், வரதுங்கராம பாண்டியன், சீவலமாறன் பாண்டியன் போன்றோரை குறிப்பிடலாம். பெரும்பாலும் இந்த தென் பாண்டி நாட்டினை பாண்டியர்களே ஆட்சி செய்தார்கள் என்ற போதி லும், பல்லவர்களும், சோழர்களும் ஆட்சி செய்த காலமும் உண்டு.

வளமும், வரலாற்றுச் சிறப்பும் கொண்ட இந்த நெல்லைச் சீமையில் 26, 27.8.1950இல். ஆம், 57 ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாவட்ட மாநாட்டிற்கு நான் தான் தலைமை வகித்தேன். இன்றைய தலைமைக் கழக அமைப்புச் செயலாளர் தம்பி இளங்கோவனின் தந்தையும், தத்துவ மேதையுமான அருமை நண்பர் டி.கே.சீனி வாசன் அந்த மாநாட்டினைத் திறந்து வைத்தார். "ஆடும், மாடும்" என்ற அற்புதமான புதினத்தை அளித்தவர் அவர். அதை நாடும், ஏடும் பாராட்டி, நல்வாழ்த்துக் கூறியது. கோவில்பட்டி நகரத்தில் வெள்ளைச்சாமி பந்தலில் அந்த மாநாடு நடை பெற்றது.

அதன் பின்னர், 1954ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில், இதே பாளையங்கோட்டையில் நண்பர் கவிஞர் கண்ணதாசன் தலைமையில், சமூக சீர்திருத்த மாநாடும், நண்பர் ஏ.வி.பி. ஆசைத்தம்பி தலைமையில் அரசியல் மாநாடும்

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

## மழை, வெள்ளச் சேதம்:

# முதல்வரிடம் நிவாரண நிதி குவிகிறது!

## கட்சித் தலைவர்கள் - தொழிலதிபர்கள் - அரசு அதிகாரிகள் வழங்கினர்!

**சென்னை, டிச. 13-**

**தமிழ்நாட்டில் சென்னை உள்ளிட்ட நான்கு மாவட்டங்களில் 'மிக்ஜாம்' புயல் தொடர்பாக மிக கனமழை பெய்து அதன் காரணமாக எங் கும் வெள்ளக் காடாக காட்சி அளித்த நிலையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மேற் கொண்ட துரித நடவடிக்கைகள் காரணமாக உடனுக்குடன் நிவாரண நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு விரைவிலேயே இயல்பு வாழ்க்கை திரும்பியது.**

**இந்நிலையில் வெள்ளச் சேதாரம் என்பது சற்று அதிகமாகவே இருந்தது. முதலமைச்சரு டன் அமைச்சர்கள், அதிகாரிகள், கழக சட்ட மன்ற, நாடாளு மன்ற உறுப்பினர்கள் உள் ளாட்சி அமைப்பின் நிவாரணப் பணிகளில் ஈடு பட்ட நிலையில் உடனுக்குடன் நிதி அறிவிக்க தேவையான தொகையினை முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு வழங்குமாறு முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வேண்டு கோள் விடுத்திருந்தார்.**

இதுதொடர்பாக அவரது வேண்டுகோள் வருமாறு:–

மிக்ஜாம் புயலால் கடந்த டிசம்பர் 2 முதல் 4ஆம் தேதி வரை சென்னை மற்றும் சுற்றுப்புற மாவட்டங் களில் கொட்டித் தீர்த்த மழை என்பது, 47 ஆண்டு கால வரலாற்றில் இல்லாத அளவிலான பெருமழை. இந்த இயற்கைப் பேரிடரால் ஏறத்தாழ 1 கோடிக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இந்தப் பேரிடர் சென்னை மற்றும் சுற்றுப்புற மாவட்டங்க ளுக்கு ஏற்பட்டுள்ள பேரிடர் மட்டுமல்ல, ஒட்டுமொத்த தமிழ்நாட்டுக்குமே ஏற்பட்டுள்ள பேரிடர்.

மழைநீர் வடிகால் பணிகளை முன்கூட்டியே திட் டமிட்டுச் செயல்படுத்தி இருந்ததால்தான் பேரழிவு தவிர்க்கப்பட்டது. அதேபோல் அனைத்துத் துறை களும் பேரிடரை எதிர்கொள்ளத் தயார் நிலையில் இருந்ததும், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்து வைத்திருந்ததும் இணைந்து மக்களைக் காத்துள்ளது. இருப்பினும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் முழுவீச்சில் நடைபெற்ற மீட்புப் பணிகளின் காரண மாக மூன்று நாட்களுக்குள் பெரும்பாலான இடங்கள் மீட்கப்பட்டு இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பி உள் ளது. குறிப்பிட்ட சில பகுதிகளில் மீட்புப் பணி நடந்து வருகிறது. இத்தகைய அசாதாரண நேரத்தில் அனைத்துத் தரப்பும் மக்களுக்கு உறுதுணையாக நிற்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த இயற்கைப் பேரிடரிலிருந்து மீள்வதற்கான கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்ட வேண்டியது அவசியமாகிறது.

எனவே, அரசின் முனைப்பான முயற்சிகளுக்கு நமது சமுதாயத்தின் ஒவ்வொரு பிரிவினரும் தங்க ளால் இயன்ற வகையில் உதவி செய்ய வேண்டியது அவசியம். இச்சூழலில் முதலமைச்சரின் பொது



நிவாரண நிதிக்கு தாராளமாக நிதி வழங்கிட வேண் டுமென்று உங்கள் அனைவருக்கும் வேண்டுகோள் விடுக்கின்றேன். அதன் தொடக்கமாக என்னுடைய ஒரு மாத கால ஊதியத்தை முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு வழங்குகிறேன். தமிழ்நாட்டில் உள்ள அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களும் நாடாளுமன்ற மக்களவை மற்றும் மாநிலங்களவை உறுப்பினர்களும் தங்களுடைய ஒரு மாத கால ஊதியத்தை முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு வழங்கிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவ்வறிக்கையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டிருந்தார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பு வெளியானவுடன் சட்டமன்ற – நாடாளுமன்ற உறுப்பினர்களுடன், பல்வேறு கட்சித் தலைவர்களும் தனியார் நிறுவனங்களும் அரசு அதிகாரிகளும், பல்வேறு சங்கத்தினரும், அமைப்பினரும் முதல்வர் பொது நிவாரண நிதிக்கு நன்கொடை அளித்து வருகின்றனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வேண்டுகோள் வெளியானவுடன் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் ரூ.10 லட்சமும், ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அவர்கள் ரூ.10.20 லட்சமும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் அவர்கள் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பில் ரூ.10 லட்சமும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் வழங்கினர்.

டி.வி.எஸ்.குழுமத் தலைவர் வேணு சீனிவாசன் ரூ.3 கோடியும், பி.எஸ்.சி. குழுமத்தின் சார்பில் ராஜீவ் கார்த்திகேயன் ரூ. ஒரு கோடியும் அசோக் லேலண்டு நிறுவன சார்பில் அதன் மேலாளர் இயக்குநர் ஷேனு அகர்வால் ரூ.3 கோடியும் சன்மார் குழும நிறுவன சார்பில் அதன் தலைவர் விஜயசங்கர் ரூ. ஒரு கோடியும், என இதுவரை வழங் கியுள்ளனர். தொடர்ந்து பல்வேறு நிறுவனங்கள் வழங்கியும் வருகின்றன.

சன் குழுமத்தின் சார்பில் அதன் தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர் கலாநிதிமாறன் அவர்கள் ரூ.5 கோடியை முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு வழங்கினார்.

தமிழ்நாடு இந்திய ஆட்சிப் பணி அலுவலர் சங்கத்தினரும், தமிழ்நாடு இந்திய காவல் பணி அலுவலர் சங்கத்தினரும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களைச் சந்தித்து ஒரு நாள் சம்பளத்தை நிதி யாக வழங்குவதாக தெரிவித்துள்ளனர். இதில் தமிழ் நாடு இந்திய காவல் பணி அலுவலர் சங்க சார்பில் ரூ.9.78 லட்சம் நிதி அளித்துள்ளனர்.

இது தவிர சக்தி மசாலா நிறுவனம் சார்பில் ரூ.1 கோடியும் லயன் டேட்ஸ் நிறுவனம் சார்பில் ரூ.50 லட்சமும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர் களிடம் நிதி வழங்கப்பட்டது. தொடர்ந்து பல்வேறு நிறுவனங்களும் வழங்கி வருகிறது.

புயல் மழையின் காரணமாக பல்வேறு இன்னல் களுக்கு ஆளாகி உள்ள மக்களின் துயர் துடைப் பதே தங்களின் தலையாய கடமை என்று செலவீ னம் பற்றி பாராமல் அல்லும் பகலும் உழைத்து வரும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வேண்டு கோளை ஏற்று முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு கட்சித் தலைவர்கள் – தனியார் நிறுவனங் கள், அரசு அதிகாரிகள் பொதுமக்கள் நிதி அளித்து வருவது கவனிக்கத்தக்கது.